# காஞ்சி ஹிந்திஎதிர்ப்பாளர் மகாநாடு.

## கொடியேற்றுவிழாப் பேருரை.

### அக்ரகார மந்திரிசபையார் சூழ்ச்சி விளக்கம்.

## கான்பகதூர் கலீபுல்லா வீரமுழக்கம்.

27-2-38ல் காஞ்சிவரத்தில் நடைபெற்ற ஹிந்தி எதிர்ப்பாளர் மகாநாட்டில் கொடி ஏற்று விழாவாற்றிய, தோழர் கலீபுல்லா சாயபு எம். எல். ஏ. அவர்கள் செய்த சொற்பொழிவின் சாரமான பகுதியைக் கீழே தருகிறோம்.

மதிப்பிற்குரிய பெரியார்களே!

இன்று, ஹிந்தி எதிர்ப்பாளர் மகாநாட்டுக் கொடி ஏற்று விழாவாற்றும் கௌரவத்தை எனக்கு அளித்தமைக்காக நான் எனது மனப்பூர்த்தியான வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பழங்கதை

சென்ற ஏப்ரல் மாதம் 15ந் தேதி நான், ராஜகிரியில் பேசுகையில் முஸ்லிம்களைக் காங்கிரசில் சேர்க்க முயலுபவர்கள், ஹிந்தி பிரசாரத்தைவிட்டு விட்டு உருதுபிரசாரம் ஆரம்பிக்கவேண்டுமென காங்கரசுக்கு நான் ஒரு யோசனை கூறினேன். அப்போது ஹிந்தியைக் கட்டாய பாடமாக்கும் யோசனை கிடையாது.

6 மாதம் சென்ற பின்

அதற்கு 6 மாதங்களுக்குப் பிறகு காங்கரஸ் 6 மாகாணங்களில் மந்திரி பதவி ஏற்றது. ஹிந்தி கட்டாய பாடமாக்கப் பட வேண்டுமென்ற பிரச்சினையை ஆச்சாரியார் சென்னையிலே கொண்டு வந்தார். ஹிந்தி பிரச்சினை இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஒரே விதமாக மனதைப் புண் படுத்தும் தொல்லையாக இருக்கிறது. உருது, ஹிந்தியைவிட எவ்வளவோ சிறந்த மொழி. அது மொகலாயர்கள் காலத்தில் அரசியல் மொழியாகவும் இருந்தது. ஆனால் அது கட்டாயப்படுத்தப் படவில்லை. அதைப் போலவே பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்ட போதும், உருது கல்லூரி ஏற்படுத்தப்பட்டதுடன், ஐ. சி. எஸ். காரருக்கும 'மிலிடரி'க்கும் உருது கற்றுக் கொடுக்கப்பட்டது. பெரும்பான்மையான மக்கள் உருது பேசுகின்றனர். ஆனால் அது கட்டாய பாடமாக்கப்பட வேண்டுமென்ற திட்டம் கிடையாது. ஆனால் ஹிந்தி அகில இந்தியாவிற்கும் பொது மொழியாக வேண்டுமென இப்போது சொல்லப்படுகிறது—கட்டாயப் படுத்தப்படுகிறது.

ஹிந்தி அவலட்சண மொழி.

ஹிந்திபாஷை ஒரு கலப்பு மொழி. பலவித மொழிகளின் சேர்க்கையால் ஏற்பட்டது. அதனை 30 லக்ஷம் பேரே பேசுகின்றனர். அதுவும், இடத்திற்கு இடம் வெவ்வேறு விதமாகப் பேசப்படுகிறது. ஒருவித ஹிந்தி பேசுபவர் மற்றொரு வித ஹிந்தியைத் தெரிந்துகொள்ள முடியாது. இத்தகையமொழியா பொதுமொழியாக முடியும்!

ஆச்சாரியார் அபத்தம்.

ஆச்சாரியார், ஹிந்தி கட்டாய பாடமாக்க வேண்டியதற்காகக் கூறும் காரணங்களில் முக்கியமானவை இரண்டு. இந்தியாவிற்கு ஒரு பொது மொழிவேண்டுமாம், இந்திய தேசிய ஒற்றுமைக்கு ஹிந்தி மொழி அவசியமாம். தேசிய ஒற்றுமையை ஹிந்தி மொழி மூலம் நாம் அடைய முடியாது. இந்தியாவிற்கு ஒரு பொது மொழி அவசியமுமல்ல. இரண்டாவது காரணம், ஆச்சாரியார் கூறுவது என்னவென்றால் ஹிந்தி கற்றுக்கொண்டால் துளசிதாசரின் இராமாயணத்தைப் படிக்கலாமென்பதாகும். கம்பராமாயணத்தை விடச்சிறந்த நூல் வேறொன்றுமில்லை. கம்பராமாயணத்தைவிட துளசிதாஸ் இராமாயணம் சிறந்ததா? கம்பரைவிடப் பெரிய கவி வேறு யார்? கம்பராமாயணம் இருக்க துளசிதாசரின் இராமாயணத்தை படிக்க வேண்டிய அவசியமென்ன? மற்றும், ஹிந்தியை 17 கோடி பேர் பேசுவதாகச் சொல்லுகிறார்கள். இது ஒரு பிரம்மாண்டமான பொய். சர்க்காரின் புள்ளி விவரங்கள் இருக்கின்றன அதைப் பார்த்தால் உண்மை விளங்கும். ஹிந்தியை 30 இலக்ஷம் பேரே பேசுகின்றனர்.

தேர்தலுக்கு நிற்கட்டுமே!

ஆச்சாரியார் தமது பேச்சுகளிலே மந்திரிகள், பொது ஜன ஊழியர்களெனக் கூறியிருக்கிறார். எந்தப் பொது ஜனம் இவரை ஹிந்தி கட்டாய பாடமாக்கவேண்டுமெனக் கேட்டுக் கொண்டது. இவர், வட நாட்டு தலைவர்கள் கேட்டுக் கொண்டதற்காக, தென்னாட்டினருக்கு ஹிந்தியைக் கட்டாய பாடமாக்கித் தொல்லை கொடுக்க வேண்டுமா? ஆச்சாரியார் தமது மந்திரி சபையைக் கலைத்துவிட்டு, ஹிந்தி கட்டாய பாடமாக்கும் பிரச்சினையைக் கூறி மறு தேர்தலுக்கு நிற்கட்டுமே பார்ப்போம் கட்டாயம் அவர்கள் தோல்வி அடைவார்கள் என்பதை நான் கூறுகிறேன்.

துணிந்து நிற்போமாக.

ஹிந்தியை எதிர்ப்பவர்களை, ஆச்சாரியார், அறிவிலிகள் என்று தூற்றுகிறார் ஹிந்தியைக் கட்டாயபாடமாக நாம் ஏற்றுக் கொள்ளாவிட்டால், வடநாட்டில் நம்மைக் "குரங்குகள்" என்று வைவார்கள் என்கிறார். ஆச்சாரியாருக்கு வேண்டுமானால் நாம் குரங்குகள் என்ற எண்ணமிருக்கலாமே தவிர வடநாட்டினர் நம்மை அப்படிச் சொல்ல மாட்டார்கள். நம்மை ஆச்சாரியார் தூற்றுவதைக்கண்டு —வசவுகளுக்குப் பயந்து விடலாமா? நம்மை அவர் அவ்வளவு கேவலமாக மதித்து, இருக்கிறார் என்பது நன்கு விளங்குகிறது. நாம் துணிந்து நின்று ஹிந்தி கட்டாயப் பாடமாக்கும் திட்டத்தை எதிர்த்து நின்று வெற்றி பெறுவோமாக.

---

## மைசூர் மகாராஜா

### உதகமண்டலவிஜயம்.

உதகமண்டலம், மார்ச்சு. 7

உதகமண்டலத்தில் சிலகாலம் தங்குவதற்காக மைசூர் மகாராஜா சமீபத்தில் இங்கு விஜயம் செய்வார் எனத் தெரியவருகிறது.